பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 20

திங்கட்கிழமை
16 டிசெம்பர் 2024

மார்கழி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## டில்லியில் அநுர

கொழும்பு, டிசெ.16
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுப் பிற்பகல் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா சென்றடைந்துள்ளார்.

11

# உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் மாத ஆரம்பத்தில்

### அரசுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, டிசெம்பர் 16

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் உள்ளூராட்சித் தேர்தலையும், செப்ரெம்பர் மாதம் மாகாணசபைத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

11

## மஹிந்தவின் உயிருக்கு அரசாங்கமே பொறுப்பு

கூறுகிறார் நாமல்

02

அம்பாந்தோட்டையில்

## சீனாவின் பெருந்தொகை நிதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

03

## பொருள்கள் விலையுயர்வு கட்டுப்படுத்த நடவடிக்கை

02

## பொலிஸார் மீது தாக்குதல்: சந்தேகநபர்கள் மூவர் கைது



கிளிநொச்சி, டிசெ.16
வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை விசுவமடு, சுண்டிக்குளம் சந்திப் பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்களை மறித்துச் சோதனையிட முயன்றபோது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் கண்ணாடிப் போத்தல் ஒன்றால் பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கி

11

## அநாமதேய அழைப்பால் பறிபோனது ரூ. 226,000

### முறைப்பாடு செய்யச் சென்றவரை பொலிஸ் அலையவிடுவதாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ.16
காரைநகரைச் சேர்ந்த ஒருவரின் வங்கிக் கணக்கிலிருந்து 2 லட்சத்து 26 ஆயிரம் ரூபா காணாமல்போயுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதுதொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றபோது மறுநாள்

11

சேமமடுக்குளத்தின்

## வான்பகுதியில் சடலம் மீட்பு

வவுனியா, டிசெ.16
வவுனியா, சேமமடுக்குளத்தின் வான்பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த நிரஞ்சன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் வனஜீவராசிகள் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபடும் அரச உத்தியோகத்தராவார்.

நேற்றுமுன்தினம் மாலை சேமமடுக்குளத்தின் ஆற்றுப் பகுதிக்குச் சென்ற இவர் நீண்டநேரமாகியும் திரும்பாததால்

11

## 5 அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள்

கொழும்பு, டிசெ.16
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியா சென்றுள்ள நிலையில், 5 அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் காணப்படும் டிஜிற்றல் பொருளாதாரம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய 3 அமைச்சுக்களுக்கும், வெளிநாட்டு

11

## எலிக்காய்ச்சல் தொற்று; 23 வயது இளைஞன் பலி!

### 8 ஆக அதிகரித்தது உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16
கரவெட்டியைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்த நிலையில், அவரது உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சல் தொற்றே காரணம் என்பது மருத்துவ பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த ரி.கிருசாந் (வயது-23) என்ற இளைஞரே இவ்வாறு

11




## ஓயவில்லை எலிக்காய்ச்சல்; ஒருநாளில் 17 பேருக்கு அறிகுறி

யாழ்ப்பாணம், டிசெ.16
நேற்றுவரை 76 பேர் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுவரையான 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 15 பேரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 2 பேரும் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போதுவரை இரு மருத்துவமனைகளிலும் 39 பேர் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை, எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையான தீர்வுத் திட்டமே தமிழர் உரிமைகளுக்கு பலம் தரும்

## சுமந்திரனுக்கு செல்வம் பதிலடி

வவுனியா, டிசெ.16

**தமிழரசுக்கட்சி கூடுதலான ஆசனங்களைப் பெற்றுவிட்டது என்பதற்காக அவர்கள் எடுக்கின்ற முடிவுக்கு ஏனைய கட்சிகள் ஒத்துவரவேண்டும் என்று சொல்வது முறையற்றசெயல். அனைவரும் இணைந்து ஒற்றுமையான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கின்றபோதே எமது மக்கள் அதை விரும்புவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களைப் பொறுத்தவரை பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இனப்பிரச்சினை சார்ந்த விடயத்தில் ஒரு கட்சி எடுக்கும் முடிவுக்கு ஆதரவாக மற்றக் கட்சிகள் ஒத்திசைவது சாத்தியமில்லை.

ஒன்றாக இணைந்து ஒரு மேசையில் இருந்து விவாதித்து ஒரு தீர்வுத்திட்டத்தைமுன்வைக்கும்போதே அது வலுவானதாகவும் பலமானதாகவும் இருக்கும். அதன்மூலமே புதிய அரசியல் சாசனத்தில் எவ்வாறான கோரிக்கையை முன்வைக்கலாம் என்ற கடமைப்பாட்டை நாம் செய்யமுடியும். அதைவிடுத்து வெறுமனே தேர்தல் வெற்றிகளை வைத்து தீர்வு விடயத்தைப் பார்க்க முடியாது.

ஒற்றுமையான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கின்றபோதே எமது மக்களும் அதை விரும்புவார்கள். அந்த பலத்தின் மூலமே அரசாங்கத்தின் பார்வையை எமது பக்கம் திருப்ப முடியும். தனித்தனியாகச் செயற்பட்டால் அதைவைத்து அரசியல் செய்யும் நிலையில் புதிய அரசு ஈடுபடும். அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கடந்தகாலங்களில் தமிழரசுக்கட்சி தீர்க்கமான நிலைப்பாட்டில் இருந்துள்ளது. சில வரைபுகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே மற்றவர்கள் எமது நிலைப்பாட்டோடு இணைந்து செயற்பட முன்வந்தால். அதில் எந்த ஆட்சேபனையும் இருக்கப்போவதில்லை. நாம் தமிழர்களின் பிரதான கட்சி, இந்தத் தேர்தலில் வடக்கு- கிழக்கில் சகல மாவட்டங்களில் இருந்தும் ஆசனங்களைப் பெற்ற ஒரே யொரு கட்சி என்று எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிடுவது அபத்தமானது- என்றார். (ச-110)

## சபாநாயகர் பதவிக்கு ஐ.ம.சக்தியும் போட்டி

வவுனியா, டிசெ.16

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவிக்கு எமது கட்சியில் இருந்தும் வேட்பாளர் ஒருவர் முன்மொழியப்படவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபாநாயகர் பதவியை வகித்த அசோக ரன்வல போலிக் கல்வித் தகைமை குற்றச்சாட்டுக் காரணமாக பதவி விலகியுள்ளார். அதிலிருந்து விலகியது மாத்திரம் போதாது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் அவர் விலக வேண்டும். அதுவே உரிய தண்டனையாக அமையும்.

பிரதி சபாநாயகர் விசேட மருத்துவ நிபுணர் எனக் கூறப்பட்டது. ஆனால் அவரும் சாதாரண மருத்துவர்தான். இதுதொடர்பிலும் நாம் கேள்வி எழுப்புவள்ளோம்.

டிசெம்பர் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சபாநாயகரை தெரிவுசெய்ய வேண்டும். எமது தரப்பிலும் வேட்பாளர் ஒருவர் அந்தப் பதவிக்கு முன்மொழியப்படுவார். தகுதியான ஒருவரை பிரேரிப்போம் - என்றார். (ச-44)

## பொருள்கள் விலையுயர்வு கட்டுப்படுத்த நடவடிக்கை



கொழும்பு, டிசெ.16

நாட்டில் பண்டிகைக் காலத்தில் பொருள்களின் விலை உயர்வடைவது வழமையானது. அதனைக் குறைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு பல்வேறு நிறுவனங்களும், நபர்களும் தலையீடு செய்வதுதான் காரணம். பேச்சு மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கின்றோம். மக்களுக்குத் தட்டுப்பாடின்றி பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்க நிறுவனம் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக சதொச நிறுவனம் மூலம் அத்தியாவசிய பொருள்களின் விலையை 25 வீதமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## மஹிந்தவின் உயிருக்கு அரசாங்கமே பொறுப்பு

### கூறுகிறார் நாமல்

கொழும்பு, டிசெ.16

மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு ரீதியில் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும் என்று மொட்டுக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்புப் பிரச்சினை உள்ளது. எனினும், அவரின் அரசியல் பயணம் தொடரும். அறுகம்பே பிரச்சினை இருந்தது. பாதாளக் குழுப் பிரச்சினை உள்ளது. புலிகளின் சின்னங்களுடன் 10 இடங்களில் நினைவேந்தல்கள் நடந்துள்ளன.

உரிய பாதுகாப்பு மீளாய்வின் பின்னர், மஹிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல் இல்லை எனக் கருதி பாதுகாப்பை இந்த அரசாங்கம் குறைத்திருக்கலாம் என நம்புகின்றேன். எனவே, ஏதேனும் நடந்தால் அரசாங்கம்தான் பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (ச-44)

## 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்கக் காத்திருப்பு

கொழும்பு, டிசெ.16

புதிதாக நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவிப் பிரமாணம் செய்வதற்காக ஐந்து பேர் காத்திருப்பில் உள்ளனர்.

அதன்படி புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பைசர் முஸ்தபா, ஐக்கிய மக்கள் சக்தியின் சுஜீவ சேனசிங்க, மனோ கணேசன், முஹம்மட் இஸ்மாயில் முத்து மொஹம்மட், நிசாம் காரியப்பர் ஆகியோரே இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வின் போது இவர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# தேசிய நல்லிணக்கத்துக்கு பிறமொழி அறிவு அவசியம்

## சுவிஸ் பிரதித் தூதுவர் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.16

தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு அனைத்து இனத்தவரும் பிற மொழிகளை கற்பது அடிப்படையானது. மொழியினூடாக சமூகங்களினிடையே சமூக நல்லிணக்க ஒற்றுமையை பேண முடிவும் என்று இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிட்ஸர்லாந்து பிரதித் தூதுவர் ஒலிவியர் பிறாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டாம் மொழிக் கற்கைநெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொழிகள் தொடர்பாகசுவிட்ஸர்லாந்து அரசு பிரதான கவனம் செலுத்துகின்றது. அங்கு பிரெஞ், ஜேர்மன் , இத்தாலி ஆகிய மூன்று மொழிகள் காணப்படுகின்றன. மொழியினூடாக சமூகங்களினிடையே நல்லிணக்கசிறந்த ஒற்றுமையைப் பேணுவது பிரதான நோக்கமாக காணப்படுகிறது.

தாய்மொழியைத் தவிர வேறு மொழிகளைக் கற்பதற்கு நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

அந்தவகையில் பிறமொழிகளைக் கற்பது தேசிய நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும். நாடும் வளர்ச்சி அடையும்- என்றார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாந்தோட்டையில்

# சீனாவின் பெருந்தொகை நிதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்


**கொழும்பு, டிசெ.16**

**அம்பாந்தோட்டையில் இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை பெரிய முதலீட்டில் நிர்மாணிக்க சீனா தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.**

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது குறித்து சீனா ஆர்வம் செலுத்தியுள்ளது. குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான இணக்கப்பாடு கடந்த அரசாங்கத்துடன் எட்டப்பட்டிருந்தது.

தெற்காசியப் பிராந்தியத்தில் மிகப்பெரிய சுத்திகரிப்பு நிலையத்தை அம்பாந்தோட்டையில் உருவாக்கி அந்தப் பிராந்தியத்தில் எண்ணெய் ஆதிக்கத்தை மாற்றுவதற்கான திட்டமாகவே இது உள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீன விஜயத்தின் போது இது குறித்தும் ஆலோசிக்க திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக துறைமுக நகர் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக துரிதப்படுத்த சீனா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



பருத்தித்துறையில்

## அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16

தமிழ்த் தேசத்தின் அரசியல் ஆணிவேராக திகழ்ந்த தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 18 ஆவது ஆண்டு நினைவுதினம் பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் ஈகைச்சுடரினை ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் ஏற்றிவைத்தார். கட்சி உறுப்பினர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். (ச-25, 27)

## ராஜாங்கனை நீர்த்தேக்க வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, டிசெ.16

பலத்த மழை வீழ்ச்சி காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வினாடிக்கு 3775 கன அடி நீர் கலா ஓயாவிற்கு விடுவிக்கப்படுகிறது. தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## அரச சார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்வது கட்டாயம்

கொழும்பு, டிசெ.16

இலங்கையில் இயங்கும் அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பதிவு நடைமுறையின் படி, சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் செயலகத்தில் தொடர்புடைய ஆவணங்களை ஒப்படைக்கவேண்டும்.

அவை பாதுகாப்பு அமைச்சகம், வெளியுறவு அமைச்சகம் மற்றும் தொடர்புடைய அமைச்சகங்களுக்கு அனுமதி பெற அனுப்பப்படும். அனுமதி அறிக்கைகள் பெறப்படும் வரை, ஆறு மாதங்களுக்கு ஒரு தற்காலிக சான்றிதழ் அமைப்புக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

காரைநகர் கடலில்

## அடித்துச் செல்லப்பட்ட இருவர் மீட்பு

காரைநகர், டிசெ.16

காரைநகர் கசூரினா கடலில் மூழ்கி அடித்துச் செல்லப்பட்ட இருவர் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினர் மற்றும் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. கசூரினா கடற்கரைக்கு வருகை தந்த யுவதியும் இளைஞரும் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் அடித்துச் செல்லப்பட்டபோது விரைந்து செயற்பட்ட பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினரும், கடற்படையினரும் நீரில் அடித்துச் செல்லப்பட்ட இருவரையும் காப்பாற்றியுள்ளனர். (ச-27)

# நியூஸிலாந்து உதவிக்கரம்

பல்வேறு துறைகளில் இலங்கைக்கு உதவுவதாக நியூஸிலாந்து உறுதியளித்துள்ளது.

அதற்கமைய உணவுப் பாதுகாப்பு, மருத்துவ விஞ்ஞான ஆய்வு, விளையாட்டு மற்றும் சுற்றுலா மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு உதவிகளை வழங்கத் தயார் என இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவர் டேவிட் பைன் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மேலும் இலங்கையில் நியூஸிலாந்தின் முதலீடுகளை அதிகரிக்கவும், இலங்கைக்கு வருகை தரும் நியூஸிலாந்து சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் உதவிகள் வழங்கத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




**பொய்** சொன்னாலும் பொருந்தச் சொல்லோணும். அப்பிடிச் சொல்லாட்டி சந்தி மட்டுமில்லை சபையே சிரிக்கும். கிட்டடியில அப்பிடி ஒரு சம்பவம் யாழ்ப்பாணக் கச்சேரியில் நடந்த விவசாயக் குழுக்கூட்டத்தில நடந்திருக்கு. இந்த முறை கடும் மழை எண்டதால, வெள்ளத்தால கன இடங்களில பெரும் பயிரழிவு. அதுகளை ஆராய்ஞ்சு, பாதிக்கப்பட்டவைக்கு என்னென்ன உதவி செய்யலாம், இந்தப் பாதிப்பில இருந்து மீள்றதுக்கு என்ன வழி இருக்கு? இப்பிடி அழிவு அடுத்தமுறை வராமலிருக்க என்ன செய்யோணும்? எண்டெல்லாம் இந்த மீட்டிங்கில கதைச்சிருக்கினம்.

இந்தமுறை என்னென்ன பயிர், எவ்வளவு ஏக்கரில அழிஞ்சிருக்கு எண்டு அதிகாரிமார் கேக்க, கமநலத் திணைக்களக்காரர் இன்னும் கன இடங்களில வெள்ளம் நிக்குது. அது வத்தின பிறகுதான் எவ்வளவு அழிவெண்டு சரியாச் சொல்லமுடியும் எண்டு உண்மையை ஒத்துக்கொண்டிருக்கினம். ஆனால் விவசாயத்திணைக்களக்காரரோ என்னென்ன பயிர், எவ்வளவு ஏக்கர் அழிவு எண்டு 'ரிப்ரொப்பா' புள்ளிவிவரங்களை குடுத்திருக்கினம் –பரவாயில்லையே, இந்த மழை வெள்ளத்துக்கையும் போய் தரவுகளை எடுத்திருக்கினமே எண்டு விவசாயத் திணைக்களக்காரரை அதிகாரிமார் பாராட்டிக்கொண்டே ஒவ்வொரு தரவா பாக்கேக்க , பீற்றூட்டின்ர முறை வர அவைக்கே 'பக்கெண்டு' போட்டுதாம். யாழ்ப்பாணத்தில மட்டும் நூற்றுக்கணக்கான ஏக்கரில பீற்றூட் செய்கை மழையால அழிஞ்சிருக்கெண்டு அதில இருந்திருக்கு.

நூற்றுக்கணக்கான ஏக்கர் அழிவோ? எண்டு அதிகாரிமார் கேக்க, கடும் அழிவு எண்டு திணைக்களக்காரர் சொல்லியிருக்கினம்.


நாடு முழுக்க எத்தினை ஏக்கரில பீற்றூட் செய்யினம் எண்டு தெரியுமோ? அதிகாரிமாரின்ர இந்தக் கேள்விக்கும் திணைக்களக்காரர் அச ரேலை.

நாங்கள் யாழ்ப்பாணம் மட்டும் தானே பாக்கிறம். மற்ற இடங்களின்ர விவரம் தெரியாது தானே எண்டு கெட்டித்தனமாச் சொல்லியிருக்கினம். கெட்டிக்காரன் புளுகே எட்டுநாளைக்குத்தானே. இவையின்ர புளுகு எட்டு செக்கன் கூட தாக்குப் பிடிக்கேலை.

நாடு முழுக்கலும் பீற்றூட் செய்யிற அளவைக் கூட்டினால் கூட நூற்றுக்கணக்கான ஏக்கர் வராது. நீங்கள் என் னெண்டால்,யாழ்ப்பாணத்தில மட்டும் நூற்றுக்கணக்கான ஏக்கர் அழிஞ்சிருக்கெண்டு கணக்கெடுத்திருக்கிறியள். இதுதான் பீல்டுக்குப் போய் விவரம் எடுக்கிறதுக்கும், வீட்டில நிண்டபடி கைக்கணக்கில விவரத்தை நிரப்பிறதுக்கும் உள்ள வித்தியாசம். இப்பிடி சும்மா பொய்யான விவரங்களைப் போட்டு அனுப்பினால், அது விவசாயிகளுக்குத்தான் பாதிப்பு. இனியாவது பீல்டுக்கு ஆக்களை அனுப்பி உண்மையான விவரங்களை எடுத்துத் தாங்கோ எண்டு செமடோஸாம். இப்பிடி சில திணைக்களக்காரர் தாங்கள் நினைச்சபடி கணக்குக் காட்டுறதாலதான், சனங்களுக்கு கிடைக்கவேண்டிய உதவியளும் கிடைக்காமல் போகுது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டிப்பரில் மரப்பலகைகளை கடத்திய இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.16

15இலட்சம் ரூபா பெறுமதியான மரப் பலகைகளை சட்ட விரோதமாகக் கடத்திய இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். மல்லாவியில் இருந்து டிப்பர் வாகனத்தில் சட்டவிரோதமாக எடுத்து வந்தபோதே அவர்கள் சிக்கினர். கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27-125)



# வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தின் வகுப்பறை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த வகுப்பறை அமைக்கப்பட்டது.

நிகழ்வில் கலைமகள் இலவசக்கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகத்தினர் என பலர் கலந்துகொண்டனர். (ச-125)

# நாட்டரிசி இறக்குமதி

யாழ்ப்பாணம், டிசெ. 16

அரச வர்த்தக(பொது) கூட்டுத்தாபனத்தின் மூலம் விரைவில் நாட்டரிசி இறக்குமதி செய்யப்பட்டு, சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

அதன் பிரகாரம் தற்போதைக்கு முதற்கட்டமாக 5,200 மெற்றிக் தொன் நாட்டரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் முதல் தொகுதி இம்மாதம் 19ஆம் திகதி இலங்கைக்கு வந்து சேரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# பரிசளிப்பு



கிளிநொச்சி, டிசெ.16

சாவகச்சேரி பிரதேசசபையின் மிருசுவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசில் நாள் நிகழ்வு சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி.சுதோகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ச-22,159)

# மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 16

எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் கிழக்கு மாகாணம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் பலத்த மழை பெய்யக்கூடும்.

இதேவேளை, பதுளை, கண்டி, குருநாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு இன்று மாலை 4 மணி வரை மண்சரிவு அபாய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வடக்கு மாகாண பண்பாட்டு விழா

மன்னார், டிசெ. 16

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் மாகாண பண்பாட்டு பெருவிழாவும் கண்காட்சியும் நிகழ்வு செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தலைமையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் மன்னார் மாவட்டச் செயலாளர் க. கனகேஸ்வரன், கௌரவ விருந்தினராக நானாட்டான் நாட்டுக்கூத்து கலைஞர் செ. மாசிலாமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-22 -25-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டுவருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**இடபம்:** பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## அமிலச் சோதனையும் மக்கள் நம்பிக்கையும்

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது போல சபாநாயகரின் கலாநிதிப் பட்டப் பிரச்சினையில் தப்பிப்பிழைத்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மானம். அசோக ரன்வலவின் பதவி விலகல் என்ற காய்நகர்த்தலால், இந்தப் பிரச்சினையை வெகு சாதுரியமாக அரசாங்கம் கடந்திருக்கிறது. இல்லாவிட்டாலும் ஆட்சிக்கு பங்கம் ஏதும் வந்து விடப்போவதில்லை. எதிரணிகள் சபாநாயகருக்கு எதிராக எத்தனை நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவந்தாலும், மூன்றில் இரண்டுக்கும் அதிகமான வீங்கிப்பருத்த பெரும்பான்மையோடு இருக்கும் அரசாங்கத்தால், அவற்றை ஊதித்தள்ளியிருக்கமுடியும். ஆனால் அப்படிச் செய்திருந்தால்,காலம் முழுதும் அது தேசிய மக்கள் சக்திக்கு அழியாக்கறைதான். ஏனெனில் ஊழல்,மோசடிக்கு எதிரானவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்தியே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சியைப் பிடித்தனர். அவர்களே ஒரு கலாநிதிப் பட்ட மோசடியாளருக்கு பக்கபலமாக நின்று, நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்திருந்தால், எதிரணியினர் அதை வைத்தே இந்த ஆட்சிமுழுதும் அரசியல் செய்திருப்பார்கள்.

சபாநாயகரின் பதவி விலகல்,தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஓர் அமிலச் சோதனையில் இருந்து காப்பாற்றியிருக்கிறது. இருப்பினும் மிகக்குறுகிய காலத்திலேயே பதவி விலகிய சபாநாயகர் என்ற மோசமான சாதனை அசோக ரன்வலவுக்கு கிடைத்திருக்கிறது. இதற்கு முன்னரும் சில சபாநாயகர்கள் பதவி விலகியிருந்தாலும்,இப்படி ஒரு போலிப் பட்ட விவகாரம் அவர்களின் பதவியைக் காவு கொள்ளவில்லை. ஒரேயொரு பட்டத்துக்கு ஆசைப்பட்டதால் வாராது வந்த சபாநாயகர் பதவியை அசோக ரன்வல தொலைத்துவிட்டு நிற்கின்றார். என்னதான் அவர் ' என்னுடைய கலாநிதிப்பட்ட ஆவணங்களைச்சமர்ப்பித்து உண்மையை நிரூபிப்பேன்' என்று சபதம் எடுத்திருந்தாலும், அவர் பக்கம் தவறிருந்ததாலேயே பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டார். அசோக ரன்வல பதவி விலகிய சிலமணிநேரத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 'யார் தவறு விட்டாலும், அவர்களின் தராதரம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்படும்' எனக் கருத்து வெளியிட்டிருந்தார். இதன்மூலம் அசோக ரன்வல செய்த தவறுக்காகவே அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விவகாரத்துக்குப் பின்னர் இப்படி தங்கள் பெயருக்கு முன்னால் போலிப்பட்டங்களை போட்டுள்ளவர்கள் உடனடியாக அவற்றை நீக்கவேண்டுமெனவும் தேசிய மக்கள் சக்தி, தன் கட்சி உறுப்பினர்களுக்கு கட்டளையிட்டுள்ளது. அதனால் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின்பெயர்களுக்குமுன்னொட்டாகத் தொங்கிய பட்டங்கள் கழன்று விழத்தொடங்கியுள்ளன.


தமது அரசாங்கத்துக்கு வைக்கப்பட்ட முதலாவது அமிலச்சோதனையில் தேசிய மக்கள் சக்தி வென்றிருக்கிறது என்றுதான் கூறவேண்டும். இந்த விவகாரத்தின் பின்னர் நாட்டு மக்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை அதிகரித்திருக்கிறது. சபாநாயகரே தவறு செய்தபோது தண்டித்த அரசாங்கம், தங்களுக்கு நேரும் அநீதிகளுக்கும் நியாயத்தைப் பெற்றுத்தரப் பின்னிற்காது என்பது மக்களின் இந்த நம்பிக்கையின் அடிப்படை. மக்களின் நம்பிக்கையை இனியும் காப்பாற்றினால் தேசிய மக்கள் சக்தி, அசைக்கமுடியாத அரசாங்கமாக மாறிவிடவும் கூடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

புரட்சி என்பது பழுத்தவுடன் விழும் ஆப்பிள் பழம் அல்ல, நீங்கள்தான் அதை விழ வைக்க வேண்டும்.

– சேகுவேரா –




# மின்கட்டணத் திருத்த ஆய்வுகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.16

**மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான ஆய்வுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இலங்கை மின்சாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள மின்சார உற்பத்திக்கான எரிபொருள் விலை தொடர்பான அறிக்கையை இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கை மற்றும் பிற தொடர்புடைய காரணிகளின் அடிப்படையில், ஆய்வு நடைபெற்று வருவதாக ஆணைக்குழு உறுதிசெய்துள்ளது. இந்த ஆய்வு தொடர்பான விரிவான அறிக்கை எதிர்வரும் 17ஆம் திகதி பொதுமக்களுக்கு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் 17 ஆம் திகதி பொதுமக்களின் கருத்துகள் சேகரிக்கும் பணி ஆரம்பமாகி, 21 நாள்களுக்கு கலந்தாய்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கடவுச்சீட்டு கையிருப்பு 2025 மத்தியில் நிறைவு

கொழும்பு, டிசெ.16

இலங்கையில், தற்போதுள்ள 7 இலட்சத்து 50ஆயிரம் கடவுச்சீட்டுகள் அடுத்த ஆண்டு ஜூலை மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கு இடையில் முடிவடையவுள்ளன.

இதனைத் தொடர்ந்து தினசரி வழங்கல் வீதத்தைப் பொறுத்து, மீண்டும் வெற்றுக் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்படவேண்டியுள்ளது என்றும் இதற்காக கேள்விப்பத்திரங்களை கோருவதில் உண்மையான சிக்கல் இருப்பதையும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால ஒப்புக்கொண்டார். (ச-இ)

## மீகொடவில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ.16

மீகொட, நாகஹவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் காரில் பயணித்த ஒருவரை இலக்கு வைத்து, அடையாளம் தெரியாத இருவரால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவத்தில் 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார். மீகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## கட்டுநாயக்க அபிவிருத்தி!

கொழும்பு, டிசெ.16

சர்வதேச விமான நிலைய அமைப்புகளுக்கு ஏற்ப கட்டுநாயக்க விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படும் என சிவில் விமான சேவைகள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், விமான நிலைய ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு விரைவில் தீர்வுகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## டெங்கு உயர்வு

கொழும்பு, டிசெ.16

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 46,934 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 23 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் உயர்திரு கனகரத்தினம் தவநாதன் (J.P)

(நியூ கருணாநிதி ஸ்டோர்ஸ், கண்டி)

**திதி: பிரதமை 16.12.2024 (திங்கட்கிழமை)**

அன்புத் தெய்வமே ஆருயிர் அப்பாவே !
ஆலமரமாய் அரவணைத்து அன்போடு அறிவூட்டிய ஆருயிர் தெய்வமே!
அல்லும் பகலும் அயராமல் எமை காத்தாய்
வானத்து நிலவாய் வலம் வந்து அரும்பணியாற்றிய அற்புதமே இப்பிறவியில் அல்ல
எப்பிறவியலும் யாம் காணோம் உமைப் போன்ற அருமருந்தை

உயிரிலும் உணர்விலும் ஒன்றாக கலந்திருந்தாய்
ஒன்றுக்கும் கலங்கவில்லை நாம் உங்களோடு இருந்தவரை
கண்மூடி மறைவாய் என்று கனவிலும் நினைக்கவில்லை
சத்தம் இல்லாமல் சித்தம் துடிக்க வைத்து
மொத்தமாய் எங்களை மோசம் செய்ததென்ன?

தாத்தா எங்கே என்று பேரப்பிள்ளைகள் தினம் கேட்பர்
அள்ளி அணைத்து நாம் அர்த்தம் தான் என்ன சொல்ல?
எம் பிள்ளைகளின் செயல்களிலே மனம் உங்களைத் தினம் காணும்
காணும் போதெல்லாம் கண்ணீர்தான் கரைந்தோடும்
வாழும் நாள் வரைக்கும் உங்களை நினைத்திருப்போம்

நினைவுகளோடு நாம் நிறைவாக வாழ்ந்திடுவோம்
ஆண்டுகள் ஐந்து ஆனாலும் அன்பு கொண்ட உங்களின் வதனம்
அருகில் இருப்பது போல் உணர்கின்றோம்
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நீங்காது உங்கள்
நினைவும் எம் நெஞ்சோடு

உங்கள் ஆத்மா இறையின் பாதங்களில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

**அன்னை மடியில்** 24.09.1948
**இறைவன் அடியில்** 11.01.2020

பிரிவால் துயருறும்
**மனைவி - கனகமணி தவநாதன் (கனடா)**
**மகன்மார் - த.காண்டீபன்** (பொறியியலாளர் - கனடா)
**த.பார்த்திபன்** (மென் பொறியியலாளர் -கண்டி)
**Managing Director**
**Universal Marble & Granite (Pvt) Ltd, Jaffna.**
**077 5599 515**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல.292,
D.S.சேனநாயக்க வீதி,
கண்டி.
"கனகபவனம்"
கைதடி தெற்கு, கைதடி.

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 02.01.2018 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



## அமரர்
## இந்திரசித்து விக்கினேஸ்வரன்
## (லலிதா ஜுவல்லரி)

கண்ணீர் பிரளயத்தில் தவிக்க விட்டு
ஏழாண்டுகள் சென்று விட்டன.
வேர் அறுந்த விருட்சமாய்
இளம் விழுதுகளுடன் தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் - நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல்
தவிக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
42/2, கடையிற் சுவாமி
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**பிறப்பு** 11.02.1977
**திதி:- மார்கழி தேய்பிறை பிரதமை 16.12.2024**
**இறப்பு** 02.01.2018

(CR/43851) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் யாழில்



யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் சமாசத் தலைவர் செல்வராசா தலைமையில் கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் சிறப்பு விருந்தினராக வும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சிறந்த அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(ச-45-17)



# முரசுமோட்டையில் தே.ம.சக்தி சந்திப்பு

கிளிநொச்சி, டிசெ.16

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் மக்களை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாகவும் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு விதமான விடயங்கள் தொடர்பாக விவசாயம் கால்நடை வளர்ப்பு சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (ச-22,113)

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) excluding VAT | Construction Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/C1/2024-07 | Extension of the Building for Fisheries Department at University of Jaffna – Stage II | 9.9 | 75 | C7 or C6 | Rs. 100,000.00 |
| 2 | YA/CWP/RE/C1/2024-08 | Improving Washroom Facilities for the Examination Hall of the CODL Building at University of Jaffna | 4.5 | 90 | C8 or C7 | Rs. 50,000.00 |
| 3 | YA/CWP/RE/C1/2024-09 | Improving Vehicle Parking Facilities at Faculty of Science, University of Jaffna | 2.7 | 30 | C8 or C7 | Rs. 30,000.00 |
| 4 | YA/CWP/RE/C1/2024-10 | Establishment of Board Room at Faculty of Science University of Jaffna | 8.3 | 90 | C7 or C6 | Rs. 85,000.00 |
| 5 | YA/CWP/RE/C1/2024-11 | Rehabilitation of Hostel Canteen at Ariviyalnagar,Kilinochchi Premises, University of Jaffna | 2.1 | 45 | C8 or C7 | Rs. 22,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** from **16th December 2024** until **06th January 2025** from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees **Two Thousand five hundred (Rs. 2,500.00)** for each bids to be deposited to the People's Bank, University of Jaffna branch with the **Reference No "97000006000276"** should be filled in the **Account Number column** in the Deposit Slip.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57** or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch to reach **on or before 10.00 hrs on 07th January 2025.** Bids will be opened soon after closing, at 10.00 hrs on 07th January 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **90 Days** from the closing date of Bids submission or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Section 5
9. Pre Bid meeting will be held at Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on 27th December, 2024 for Bid No. 01, 02, 03 and 04 and at Engineering Service Division/ Kilinochchi Premises, University of Jaffna, Ariviyalnagr, Kilinochchi at 10.00 hrs on 30th December, 2024 for the bid No. 05.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
12/12/2024

(cr 43884) (N-1)

## விற்பனைக்கு

யாழ் வெலிங்டன் சந்திக்கு அண்மையில் 30 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 4 மாடிக்கடை.
யாழ் பலாலி வீதியில் வசந்தம் பார்மசிக்கு முன்பாக 6 பரப்பு காணியும்,
யாழ் பலாலி வீதியில் மக்கள் வங்கிக்கு முன்பாக 4 பரப்புக் காணியும் வீடும்,
யாழ் மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு :
077 723 2535

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 01 . 1940



மறைவு
15 . 12 . 2024

## இராமன் கந்தசாமி

பலாலி தெற்கு, வயாவிளானைப் (விமான நிலையம் அருகாமை) பிறப்பிடமாகவும், நவற்கிரியில் வசித்தவரும், சிறுப்பிட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் கந்தசாமி நேற்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமன் - பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், முருகன் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும், சிவரட்ணம், ஜெயரட்ணம், ஜெயராணி, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்மணி, காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சின்னம்மா, வைரமுத்து, முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசபாக்கியம், மஞ்சுளா, ஆனந்தராசா, கலையரசி ஆகியோரின் அன்பு மாமனாரும், யசிந்தா, டிலக்ஷனா, சிந்துஜன், யந்துஜன், கிருஜன், கிரிசாத், கிருராஜ், கேமினா, பிரேமிளா, அகீஷ், சர்மிளா, யசீபன், யசிதா, யுஷாயினி, ஜினிஸ்ரன், துஷான், தர்மிகா, தருண், மிதுனன் ஆகியோரின் அன்புப் பேரனும், லிபிஷனா, கவீசன், அத்விகா, அஸ்மிதன், அன்ரோனி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிறுப்பிட்டி கிழக்கு நீர்வேலியில் அவரது இல்லத்தில் இன்று (16.12.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு: சிவா - 077 706 9141
ரூபன் - 077 161 7755
ஜெயரட்ணம் (பிரான்ஸ்) 0033 651 678081

(cs.56937) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்புடன் ஒருவர் கைது



கொழும்பு, டிசெ.16

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை பகுதியில் வைத்து 40 வயதுடைய ஒருவர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்துக் அருகாமையில் வைத்து குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 1.5 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

# வடக்கை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ.16**

**போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தை விசேட கவனத்தில் எடுத்து அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் வகுக்கவேண்டும் என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் வீட்டுத் திட்டங்களை வழங்கும்போது ஏழை மக்களுக்கு கூடுதல் நிதி வழங்கப்படவேண்டும். குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பது விசேட கவனத்தில் கொள்ளப்படவேண்டும். யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு உலகவங்கியின் 55 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் திட்டத்தின் கீழ் யாழ்.நகரத்துக்கான 2019 ஆம் ஆண்டில் பிரதான வடிகாலமைப்புத் திட்டம் தயாரிப்பதில் இடம்பெற்ற முறைகேட்டினால் யாழ்.நகர மக்கள் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார்கள். முறைகேடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும். வடமாகாணத்திலுள்ள தூர்வடைந்த வாய்க்கால்களை திருத்தவேண்டும். சேதமடைந்த வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும். மணல் அகழ்வு மற்றும் மரக்கடத்தல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பாதுகாப்பான புகையிரதக் கடவைகளை அமைக்கவேண்டும். நோய் பரவலைக் குறைக்க முறையான குப்பையகற்றலை உறுதிப்படுத்தல் வேண்டும். சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்தி மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றவேண்டும்-என்றார். (ச-25, 20)

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சபை நிதி - 2024 (கட்டம் XII )

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர். பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர். (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 3:00 மணிவரை 2024.12.16 ஆம் திகதியில் இருந்து 2024.12.30 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. 07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். அவர்களிடமிருந்து 2024.12.16 ஆம் திகதியிலிருந்து 2024.12.27 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரையிலும், 2024.12.30 ம் திகதி காலை 9:00 மணி தொடக்கம் 10:00 மணி வரையிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 2024.12.30 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி. கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.12.23 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பிட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/4/Council/PXII/2024/65 | தலைமையலுவலக மேம்படுத்தல் வேலை (களஞ்சியம், ஆவணக் காப்பகம், வாகனத்தரிப்பிடம் அமைத்தல் ) கட்டம் - 1 | 6.74 | 90 நாட்கள் | C7& C6 ( கட்டட நிர்மாணம்) | 77 நாட்கள் | 68,000.00 | 14.04.2025 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2024.12.16**

(cr.43824) (N-1)

# சாரதி, நடத்துநரை தாக்கியவர் கைது!

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து தனியார் பேருந்து ஒன்றின் சாரதி மற்றும் நடத்துநரைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் புன்னாலைக் கட்டுவன் - யாழ்ப்பாணம் வழித்தட தனியார் பேருந்தினை மறித்து 3 பேர் கொண்ட குழுவினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாட் டுக்கமைய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்தநிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்று உரும்பிராய் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அதேவேளை மேலும் இருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் விரத இலச்சார்ச்சனை பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.16

இருபாலை தென்கோவை அருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான விநாயகர் விரத இலட்சார்ச்சனைப் பெருவிழா இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை கஜமுக சங்கார தினத்தில் நிறைவடையவுள்ளது.

இன்றுமுதல் தினந்தோறும் மாலை 3.30 மணிக்கு அபிசேகமும், 4 மணிக்கு மூலஸ்தான பூசையும், 4.30 மணிக்கு விசேட வசந்தமண்டப பூசையும், அதைத் தொடர்ந்து இலட்சார்ச்சனையும் இடம்பெற்று பிள்ளையார் கதைபடிப்பும் நடைபெறவுள்ளது.

சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கும், சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும், கஜமுக சங்காரமும் இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் எதிர்வரும் 4ஆம் திகதி மாலை 5 மணிக்கும் நடைபெறவுள்ளது.

விநாயக சஷ்டி உற்சவமான எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அபிஷேகமும், மாலை 3.30 மணிக்கு மூலஸ்தான பூசையும், 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று பஞ்சமுக விநாயகர் வீதிவலம், பிள்ளையார் கதைபடிப்பு என்பன இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு திருவெம்பாவை ஆரம்பமாகவுள்ளது என்று தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (எ-22)

# இளங்கோவனின் உடல் தகனம்

சென்னை, டிசெ.16

உடல்நலக் குறைவால் காலமான தமிழக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் உடல் அரச மரியாதையுடன் நேற்றுத் தகனம் செய்யப்பட்டது.

இரு தடவைகள் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், நுரையீரல் தொற்றுக் காரணமாக சென்னை மியாட் மருத்துவமனையில் கடந்த மாதம் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

நேற்று அவரது இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் உடல் முகலிவாக்கம் மின் மயானத்தில் வைக்கப்பட்டு 48 குண்டுகள் முழங்க அரச மரியாதை செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டு ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் உடல் தகனம் செய்யப்பட்டது. (எ-இ)





# வெளியேறாத வெள்ளம் மக்கள் அசௌகரியம்

பளை, டிசெ. 16

பளை, இத்தாவில் தேவாலயத்துக்கு அருகில் உள்ள குடியிருப்புகளில் வெள்ள நீர் தேங்கிநிற்பதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அருகில் நீர் நிலைகள் இல்லாததால் வெள்ளத்தை வெளியேற்ற முடியாத நிலை காணப்படுகிறது. குடியிருப்பு இல்லாத காணியில் குளம் அமைத்து வெள்ளநீரை வெளியேற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ச-25,9)



*யாழில்*

# புதுவிதமான சைக்கிளில் கனடாத் தம்பதியர் உலா!

யாழ்ப்பாணம், டிசெ.16

கனடா நாட்டிலிருந்து சுற்றுலாவுக்காக யாழ்ப்பாணம் வருகை தந்த கனடா நாட்டு தம்பதியர் வடமராட்சி கிழக்கில் புதுவித வடிவமைப்பிலான சைக்கிள் ஒன்றில் சுற்றித் திரிகின்றனர். பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் கனடாக் கொடியுடன் இந்தச் சைக்கிளில் அவர்கள் பயணம் மேற்கொள்கின்றனர். இதனை அந்தப் பகுதி மக்கள் வியப்புடன் பார்வையிட்டு வருகின்றனர். (ச-22,27)

# எலிக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.16

தற்போது வடமராட்சி கிழக்கு பகுதிகளில் பரவிவரும் எலிக்காய்ச்சலைத் தடுக்கும் நோக்குடன் வீடு வீடாகச் சென்று எலிக்காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் தடுப்பு மருந்தும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையில் அம்பன் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி சிவசுதன் தலைமையிலான [illegible] பட்டுள்ளன. (ச-27)


# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 01 . 1947



மறைவு
15 . 12 . 2024

## திரு இளையகுட்டி நாகரத்தினம்
(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத் தாபன ஊழியர்)

அம்மன் கோயிலடி பலாலியை பிறப்பிடமாகவும் மயிலங்கூடல் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு இளையகுட்டி நாகரத்தினம் நேற்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பலாலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இளையகுட்டி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விநாயகர்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் ஞானரூபி (லண்டன்), சுபிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), கவிதா (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் தந்தையும் ஸ்ரீரஞ்சிதகுமார் (லண்டன்), கருணாகரன், கெங்காதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரம்யா, பிரவீன், அவிநாஸ் (லண்டன்), ஜஸ்மிகா, சாஹிசன், அன்ஜய் (லண்டன்), ஆகியோரின் பேரனும் சரஸ்வதி, விமலதாஸ், சரோஜாதேவி, விமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (17.12.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் கீரிமலை கெம்மண் வாய்க்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

மயிலங்கூடல்,
இளவாலை

தகவல்:
குடும்பத்தினர்.
077 534 0333

(CS 2056) V-1



# கண்ணீர் அஞ்சலி



எமது பத்திரிகை விற்பனை முகவர்

## சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராசா
(நெல்லியடி மொடோர்ன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன்
குழுமத் தலைவரும், பணியாளர்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு நாடுகளை சங்கடப்படுத்தும் இலங்கை அரசின் செயற்பாடுகள்

புதிய அரசாங்கத்தின் இராஜதந்திர செயற்பாடுகள் இலங்கையின் நட்பு நாடுகளை சங்கடப்படுத்துகின்றது என்று ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற சீன அரசாங்கத்தின் பாடசாலைச் சீருடைகையளிப்பு நிகழ்வில் பங்கு பற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய ஒரு மணித்தியாலம் தாமதமாகவே நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார். அத்துடன் நிகழ்வில் உரையாற்றுகையில் (People's Republic Of China) மக்கள் சீனக் குடியரசு என்பதற்குப்பதிலாக சீனக் குடியரசு (Republic Of China) என உரையாற்றியுள்ளார். சீனக் குடியரசு என்பது தாய்வானைக் குறிக்கிறது.

இதேபோல் ஈராக் தூதரகம் தனது நூறாவது இராஜதந்திர நிகழ்வை கொழும்பிலுள்ள ஒரு நட்சத்திர விடுதியில் கொண்டாடியது. இந்த நிகழ்வுக்கு தொழிற்துறை மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அழைக்கப்பட்டிருந்தபோதும் அவர் அந்த நிகழ்வில் பங்குபற்றவில்லை. ஈராக் இந்த வருடத்தின் முதல் பத்து மாதங்களில் 27.11 மில்லியன் கிலோ தேயிலையைக் கொள்வனவு செய்துள்ளது. இப்படியான செயற்பாடுகள் இலங்கையின் இராஜதந்திர உறவுகளைப் பாதிக்கும் என அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-6)

ஏன்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்

19ஆம் ஆண்டு நினைவலைகள் | 4ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் முருகேசு தாமோதரம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)
தோற்றம் 13.01.1932 மறைவு 16.12.2005
திதி: அபரபக்க பிரதமை (16.12.2024)



அமரர் நவநீதம் தாமோதரம்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)
தோற்றம் 07.07.1932 மறைவு 13.01.2020
திதி: அபரபக்க சதுர்த்தசி (18.12.2024)

அப்பா ! அம்மா !
ஆண்டுகள் பல கடந்துவிட்டன
என்றும் உங்கள் நினைவுடன்
உங்களை எண்ணி வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

(cr.43896) N-1

"கோகுலம்"
சங்கத்தானை, சாவகச்சேரி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# இந்திய அமைச்சர்களுடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு

புதுடில்லி, டிசெ.16

இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இந்திய நிதியமைச்சர் மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கும் இடையே நேற்றிரவு சந்திப்புகள் நடந்துள்ளன.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை சுற்றுலாத்துறை, முதலீடு மற்றும் விவசாயத்துறை மேம்பாட்டுக்காக முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார். கடற்றொழில் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாடு, தனித்துவமான துறைகள் தொடர்பாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்திப்பில் இலங்கையுடனான நட்புறவைப் பேணுவோம் என்று இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வலயப் பாதுகாப்பு தொடர்பில் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவாலுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையில் கலந்துரையாடலொன்றும் நடந்துள்ளது. (எ-இ)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு பளைநகர பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2025**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 16.12.2024 தொடக்கம் 29.12.2024 வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 30.12.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 30.12.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைக்கான கேள்வி அட்டவணை

| இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | பளை பொதுச்சந்தை | 1,925,115.00 | 28,876.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 59,553.87 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.

03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 30.12.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

04. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.

05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத அறை வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.

06. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.

07. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

08. இறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே ஆடு அறுத்தல் வேண்டும்.

09. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தயானந்தன் தர்சினி**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**
**16.12.2024.**

(cr.43883 (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 10 1947



மறைவு 15 12 2024

### திரு. குமரேசு காந்தரூபன்

அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.குமரேசு காந்தரூபன் அவர்கள் நேற்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு-மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-பாலசுந்தரி தம்பதியரின் பாசமிகு மருமகனும் உதயகுமாரியின் அன்புக்கணவரும் கபிலன்.முகிலன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சரண்யா.சிவகாமி ஆகியோரின் மாமனாரும். கியோன். கல்யா ஆகியோரின் ஆசைப்பேரனும் சந்திரகுமார். ஸ்டெலா சுகுணா. ஜோ ஜெயந்திரன் ஆகியோரின் சகோதரனும் பகீரதன். பிரகலாதனன். காலம்சென்ற பாலகௌரி. காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் திலீபன். குமணன். அல்லி. புவனா ஆகியோரின் மைத்துனரும் மயூரன்.விதுரன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2024) செவ்வாய்க்கிழமை அன்று மு.ப **11.00** மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக தெஹிவளை இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: குடும்பத்தினர்
**0753270597 / 0724087859**

மஹிந்த பாலர்.
மௌண்ட்லவெனியா.கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுப் படகுச்சேவை தடைகளை நிவர்த்தி செய்க

**யாழ்ப்பாணம், டிசெ.16**

**நெடுந்தீவுக்கான படகுச் சேவைகளை முன்னெடுப்பதிலுள்ள தடைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்,

சீறற்ற காலநிலையின் நிமித்தம் நெடுந்தீவுக்கான சேவைகளை வழங்கமுடியாத சூழல் காணப்பட்டது. இது தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆராயப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

அதற்குக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறூஸ்,

நெடுந்தீவுக்கான படகுச் சேவைகளை முன்னெடுப்பதற்காக வடதாரகை, குமுதினி, நெடுந்தாரகை ஆகிய மூன்று படகுச் சேவைகள் காணப்படுகின்றன.

எனினும் நெடுந்தாரகைப் படகு எம்மிடம் கையளிக்கப்பட்டாலும் அதன் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. பாதுகாப்பு அங்கிகளும் வழங்கப்படவில்லை. மேலும் வடதாரகை பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. குமுதினிப் படகுச் சேவையை மாத்திரமே நாங்கள் நடத்தி வருகின்றோம். குறித்த படகுச் சேவையின் நேர அட்டவணை, எத்தனை சேவைகளை நடத்தவேண்டும், எந்த நேரங்களில் நடத்தவேண்டும் என்பது பிரதேச செயலர் மூலமே எமக்கு அறிவிக்கப்படும். மேலும் காலநிலையின் நிமித்தமே கடந்தகாலத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள அறிவுறுத்துலுடன் பிரதேச செயலருக்கு அறிவித்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டன காலநிலையுடன் சவாலுக்கு உட்பட்டு எம்மால் பயண சேவைகளை நடத்தமுடியாது. எனவே குறித்த பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு அவற்றுக்கு தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். (ச-125)

## டில்லியில்...

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவின் அழைப்பின் பேரில் இந்தப் பயணத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி அநுர, நாளை 17ஆம் திகதிவரை இந்தியாவில் தங்கியிருப்பார்.

இந்தப் பயணத்தில் அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பல முக்கியமான விடயங்களை இருவரும் கலந்துரையாடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி சென்றடைந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்திய மத்திய அமைச்சர் எல்.முருகன் வரவேற்றுள்ளார். (அ-எ-இ)

## உள்ளூராட்சித்...

உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான திகதிகளை அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று அரசாங்கத்துக்கு நெருக்கமான தரப்புகளில் இருந்து அறியமுடிகின்றது.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை கோரும் வகையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் நடத்தவும், 7 ஆண்டுகளுக்கு மேலாகத் தாமதிக்கப்பட்டிருக்கும் மாகாணசபைத் தேர்தலை செப்ரெம்பர் மாதம் நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கின்றது.

இதுதொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது என்று அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (அ-எ-26)

## அநாமதேய....

வருமாறு பொலிஸார் திருப்பியனுப்பியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த வெதுப்பக உரிமையாளர் ஒருவரின் வங்கிக் கணக்கில் இருந்தே பணம் காணாமல் போயுள்ளது.

நேற்றுமுன்தினம் காரைநகரில் இருந்து சுழிபுரம் சந்திக்கு வேலையொன்றுக்காக வந்திருந்தபோது, எனக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. மானிப்பாய் வங்கிக் கிளையில் இருந்து பேசுகின்றோம், உங்கள் வங்கிக் கணக்கு முடக்கப்படவுள்ளது அதனால் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கூறுங்கள் என்று தொலைபேசி அழைப்பில் உரையாடியவர் கோரினார். அதேநேரம் காரைநகரில் உள்ள எனது மனைவியின் தொலைபேசி இலக்கத்துக்கும் அழைப்பொன்று வந்துள்ளது. தொலைபேசி அழைப்பில் உரையாடியவர் அவரிடம் வங்கிக் கணக்கு இலக்கத்தைக் கேட்டதுடன், வேறு வங்கிக் கணக்குகள் இல்லையா என்றும் விசாரித்துள்ளார். பின்னர் என் வங்கிக் கணக்கில் இருந்து 5 தடவைகள் 40 ஆயிரம் ரூபாவும், அதன்பின்னர் 20 ஆயிரம், 6 ஆயிரம் என மொத்தமாக 2 லட்சத்து 26 ஆயிரம் ரூபா மீளப்பெறப்பட்டுள்ளது.

அதையடுத்து மானிப்பாயில் உள்ள வங்கிக் கிளைக்குச் சென்று முகாமையாளரிடம் இது தொடர்பாக விசாரித்தபோது, அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காக வாருங்கள் என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது, உங்கள் பிரதேச பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுங்கள் என்று தெரிவித்தனர். ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையம் சென்றபோது, மானிப்பாய் பொலிஸ் நிலையம் செல்லுமாறு கூறினார்கள். அங்கு சென்றபோது வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையம் செல்லுங்கள் என்று தெரிவித்தனர். வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையம் சென்றபோது முறைப்பாட்டைப் பதிவு செய்ய தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லை. நாளை வாருங்கள் என்று தெரிவித்தனர். பணத்தைப் பறிகொடுத்துவிட்டு முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் நிலையங்களுக்கு அலைந்து திரிய வேண்டியிருக்கின்றது என்று பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்தார். (அ-எ-125)

## பொலிஸார்...

விட்டுத் தப்பியோடினர் என்று கூறப்படுகின்றது. அதில் பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய தருமபுரம் பொலிஸார், சந்தேகநபர்கள் மூவரைக் கைது செய்துள்ளதுடன், இரு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களை இன்று நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (அ-எ-113)

## வான்...

அவரை நண்பர்கள் தேடிச் சென்றுள்ளனர். இதன்போதே ஆற்றுப்பகுதியில் இருந்து இவரது சடலம் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஓமந்தைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-110)

## 5 அமைச்சுகளுக்கு...

அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு ஆகியவற்றுக்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் டிஜிற்றல் பொருளாதார அமைச்சராக, டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்னவும், பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவும், நிதி மற்றும் திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா பதில் அமைச்சராக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர நியமிக்கப்பட்டுள்ளார். பதில் தொழில் அமைச்சராக, பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (அ-எ-இ)

## எலிக்காய்ச்சல்...

உயிரிழந்தவராவார். இந்த உயிரிழப்புடன் யாழ்ப்பாணம் குடநாட்டில் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8ஆக உயர்ந்துள்ளது.

5 நாட்கள் தொடர் காய்ச்சல் நீடித்ததன் காரணமாக கடந்த 11ஆம் திகதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக அன்றையதினமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு அவர் நோயின் தீவிரத்தன்மையால் உயிரிழந்துள்ளார். (அ-எ-26-100)

## ஓயவில்லை...

யாழ்பாணத்தில் ஏழு பேரும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவரும் எலிக்காய்ச்சல் தொற்றால் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினமும் கரவெட்டியைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காய்ச்சல் காரணமாக ஏற்படும் திடீர் உயிரிழப்புகள் தொடரும் நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் நேற்றும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சென்று கலந்துரையாடியுள்ளார். (அ-எ-26-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தபேலா கலைஞர் ஜாகிர் ஹுசைன் காலமானார்

புதுடில்லி, டிசெ.16

இந்தியாவின் புகழ் பெற்ற தபேலா கலைஞர் உஸ்தாத் ஜாகிர் ஹுஸைன் உடல்நலக் குறைவு காரணமாக 73ஆவது வயதில் காலமானார்.

இதயம் தொடர்பாக பிரச்சினைகள் காரணமாக அமெரிக்காவின் சான் பிரன்சிஸ்கோவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் கடந்தவாரம் ஜாகிர் ஹுஸைன் சேர்க்கப்பட்டிருந்தநிலையில், அவர் உயிரிழந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு பத்ம பூஷன், பத்மவிபூஷன், பத்மஶ்ரீ மற்றும் இசைத்துறையில் உயரிய விருதாகக் கருதப்படும் சங்கீத நாடக அகாடமி போன்ற விருதுகளை இவர் பெற்றுள்ளார். (எ-இ)

# வெள்ளநீரால் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ.16

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்துக்கு சொந்தமான, பால் கொள்வனவு விற்பனை நிலையத்தைச் சூழ தேங்கியுள்ள வெள்ளநீரால் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். வெள்ளத்தினூடாகவே பால்கொள்வனவில் ஈடுபட வேண்டியுள்ளதாகவும் இதனால் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-25)



# இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரு தரப்பாகப் பயணிப்போம்

## சத்தியலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும். இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருதரப்பாக பயணிக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக இருக்கின்றது.

அவ்வாறான சந்தர்ப்பம் ஏற்படும் போது ஒட்டுமொத்த தமிழ்மக்களின் குரலாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சிகள் ஒன்றாக இணைந்து தமிழ்மக்களின் நிலைப்பாடு இதுதான் என்பதை அரசுடனான பேச்சில் முன்வைக்கவேண்டும்.

அந்தவகையில் தமிழ்க்கட்சிகளை பொதுவான நோக்கத்திற்காக ஒன்றுபட்டு செயற்படுவதற்கான நடவடிக்கையை நாம் எடுப்போம் - என்றார். (ச-110)

# தமிழரசு எம்.பி.க்கள் கனடாவுக்கு பயணம்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பில் பேரில் கனடாவுக்கு பயணமாகவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, கனடாவின் வெளிவிவகார அமைச்சின் இந்தோ பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதிய மைச்சர் வெல்டன் எப்பை சந்தித்து உரையாடவுள்ளார். இந்தச் சந்திப்பு கனடாவின் ஒட்டோவாவில் உள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது, பொறுப்புக்கூறல், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் சமகால அரசியல் சூழல்கள், தமிழ் மக்களின் நெருக்கடிகள் உள்ளிட்ட பலவிடயங்கள் தொடர்பாக பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய பிரதியமைச்சருடனான சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் கனடாவில் தங்கியிருக்கவுள்ள சிறீதரன் அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து உரையாடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# போலி வாகனங்கள் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, டிசெ.16

வரி செலுத்தாமல் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் போலியாகப் பதிவுசெய்யப்பட்ட சுமார் 6 ஆயிரம் வாகனங்கள் குறித்து இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த வாகனங்கள் சுங்க வரிகள் மற்றும் இதர கட்டணங்களை வசூலிப்பதற்காக சுங்கத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# போதைப்பொருள்களுடன் வெள்ளவத்தையில் மூவர் கைது

கொழும்பு, டிசெ.16

வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலிங்வூட் மாவத்தை பகுதியில் கொக்கெய்ன் மற்றும் குஷ் போதைப்பொருள்களுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# மருத்துவமனையில் அத்வானி

புதுடில்லி, டிசெ.16

பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி டில்லியிலுள்ள தனியார் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் துணைப் பிரதமரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான எல்.கே.அத்வானி (வயது-94) டில்லியிலுள்ள அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக அவர் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில், அவர் தற்போது மருத்துவமனையில் மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

அறை வாடகைக்கு தேவை

படிக்கும் மாணவர்களுக்கு அறை வாடகைக்கு தேவை.

தொடர்பு: 075 375 1921

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

அங்கர் பாதுகாப்பு சேவை நிறுவனம்
பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

இடம்- யாழ்ப்பாணம்,
சாங்கானை,
சுன்னாகம்.

தொடர்புகளுக்கு:
077 539 6350

# நம்பிக்கையில்லாப் பிரேரணை பின்வாங்கியது ஐ.ம.சக்தி

கொழும்பு, டிசெ. 16

சபாநாயகர் பதவியிலிருந்து அசோக ரன்வல விலகியுள்ள நிலையில் அவருக்கு எதிராகக் கைச்சாத்திடப்பட்டுள்ள அவநம்பிக்கை பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அவசியமில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எனினும் ஒழுக்க நெறியை மீறியமை தொடர்பில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதாகக் கூறி, தேசிய மக்கள் சக்தி, பொய்யர்களை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இவ்வாறானவர்களைக் களையெடுப்பதற்கு மீண்டுமொரு சிரமதானத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். (ச-இ)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன் 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட் நிலையில்.

- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 24 லட்சம் ரூபா

தொடர்புகளுக்கு: 076 298 1105, 076 017 1105

(cs.56920) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.